பா.ஜ.க.வின் ஆணவத்தை தமிழ்நாடு அடக்கிக்காட்டும்!

நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்படும் – “மக்கள் விரோத தொகுதி மறுவரையறை மசோதாவைக் கண்டித்து “தமிழ்நாட்டின் ” வீடுகளில் வீதிகளில், கடைகளில் கருப்புக்கொடி பறக்கட்டும்!” என, கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்த அறிவிப்பிற்கிணங்க, கழகத் தலைமை அலுவலகமான சென்னை– அண்ணா அறிவாலய முகப்பில், நேற்று கருப்புக் கொடி பறக்க விடப்பட்டிருந்த காட்சி!

கழகத் தலைவர் அவர்களின் அறிக்கைக்கிணங்க “Delimitation” என்ற பெயரில் சட்டத் திருத்தம் கொண்டு வந்து, நாடாளுமன்றத்தில் தமிழ்நாட்டின் குரலை ஒடுக்கிடும் வகையில் ஒன்றிய பா.ஜ.க. அரசு கொண்டு வரவுள்ள கருப்புச் சட்டத்துக்கு எதிராக நேற்று (16.04.2026) கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி தலைமையில் தி.மு.க. தலைமை அலுவலகமான, அண்ணா அறிவாலயத்தில் கழக நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் கருப்புச் சட்டை அணிந்து எதிர்ப்பு தெரிவித்தும், தொகுதி மறுவரையறை திட்ட நகலை எரித்தும் ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள்.

கோபாலபுரத்திலுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் இல்லத்தில் கருப்புக் கொடியேற்றி கோலமிட்டிருக்கும் காட்சி!

சென்னை – தேனாம்பேட்டை– சித்தரஞ்சன் சாலையில் உள்ள, கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இல்ல முகப்பில், நேற்று, ‘கருப்புக் கொடி’ பறக்க விடப்பட்டக் காட்சி!

தொகுதி மறுவரையறைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில், கழக துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற தி.மு.க. குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி அவர்களின் சென்னை சி.ஐ.டி. காலனியில் உள்ள – தலைவர் கலைஞர் இல்லத்தில் கருப்புக் கொடி ஏற்றப்பட்டது.

முரசொலி அலுவலகத்தில் கருப்புக் கொடி ஏற்றப்பட்டிருக்கும் காட்சி!

தொகுதி மறுவரையறை சட்டத்திருத்தத்தை எதிர்த்து, கழகத் தலைவர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, நாடாளுமன்ற மக்களவைக் கழக குழுத் துணைத் தலைவரும் கழக விளையாட்டு மேம்பாட்டு அணிச் செயலாளருமான தயாநிதி மாறன், இல்லத்தில் கருப்புக் கொடி ஏற்றப்பட்டது.

தமிழ்நாட்டின் குரலை ஒடுக்கும் வகையில் – பா.ஜ.க. அரசு கொண்டுவந்த கருப்புச் சட்டத்திற்கு எதிராக

தொகுதி மறுவரையறை திட்ட நகலை எரித்து ஆர்ப்பாட்டம்!

சென்னை அண்ணா அறிவாலயத்தில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி தலைமையில் நடைபெற்றது!

சென்னை, ஏப்.17– கழகத் தலைவர், முதல்வர் அவர்களின் அறிக்கைக் கிணங்க “Delimitation என்ற பெயரில் சட்டத் திருத்தம் கொண்டு வந்து, நாடாளுமன்ற த்தில் தமிழ்நாட்டின் குரலை ஒடுக்கிடும் வகையில் ஒன்றிய பா.ஜ.க. அரசு கொண்டு வரவுள்ள கருப்புச் சட்டத்துக்கு எதிராக நேற்று (16.04.2026) கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி தலைமையில்,

தொகுதி மறுவரையறை திட்ட நகலை எரித்து ஆர்ப்பாட்டம் அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்றது.

“Delimitation என்ற பெயரில், தனது லிமிட்டைத் தாண்டி, பா.ஜ.க. அரசு, தமிழ்நாடு உள்ளிட்ட தென் மாநிலங்களை வஞ்சிக்கிறது! நாடாளுமன்றத்தில் பா.ஜ.க. அரசு கொண்டு வரப் போகும் சட்டத் திருத்தத்திற்கு எதிர்ப்பைக் காட்டும் வகையில், தமிழ்நாட்டில் அனைவரும் நம்முடைய வீட்டில் கருப்புக் கொடியை ஏற்றுவோம். கருப்புச் சட்டத்தை எதிர்த்து நம் எதிர்ப்பின் அடையாளமாக, கருப்புக் கொடியை ஏற்றுவோம். இந்தியாவை இருண்ட காலத்துக்கு அழைத்துக் கொண்டு போகும், எதேச்சதிகார பா.ஜ.க. அரசுக்கு எதிராக கருப்புக் கொடி ஏற்றுவோம்” என முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்கள் வெளியிட்ட அறிக்கைக் கிணங்க;

நேற்று (16.04.2026) தி.மு.க. தலைமை அலுவலகத்தில் தி.மு.க. அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி தலைமையில் கழக நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் கருப்புச் சட்டை அணிந்து எதிர்ப்பு தெரிவித்தும், தொகுதி மறுவரையறை திட்ட நகலை எரித்தும் ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் கழக துணை அமைப்புச் செயலாளர் தாயகம் கவி, செய்தித் தொடர்புத் தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன், தலைமை நிலையச் செயலாளர் துறைமுகம் காஜா, மருத்துவ அணித் தலைவர் கனிமொழி என்.வி.என்.சோமு, ஆயிரம் விளக்கு கிழக்குப் பகுதிச் செயலாளர் மா.பா. அன்புதுரை, மற்றும் பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள் திரளாக கலந்து கொண்டனர்.

நாடாளுமன்றத்தில் அறிமுகம் செய்துள்ள தொகுதி மறுவரையறையை எதிர்த்து

விழுப்புரம் வடக்கு மாவட்டத்தில் வீடுகளில் கருப்புக் கொடி ஏற்றினர்!

செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தலைமை!

செஞ்சி, ஏப். 17– நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்படும் தொகுதி மறுவரையறைக்கான எதிர்ப்பை தெரிவித்து விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சிமஸ்தான் எம்.எல்.ஏ. தலைமையில் வீடுகளில் கருப்பு கொடி ஏற்றி தொகுதி மறுவரையறை மசோதா நகலை எரித்து ஒன்றிய அரசுக்கு கண்டனம் தெரிவித்தனர்.

தொகுதி சீரமைப்பு (Delimitation) என்ற பெயரில் தனது லிமிட்டை தாண்டிஒன்றிய பா.ஜ.க. அரசு தமிழ்நாடு உள்ளிட்ட தென் மாநிலங்களை வஞ்சித்து வருகிறது இன்று நடைபெறும் நாடாளுமன்றத்தில் பா.ஜ.க. அரசு கொண்டு வரப் போகும் சட்ட திருத்தத்திற்கு எதிர்ப்பை காட்டும் வகையில் விழுப்புரம் வடக்கு மாவட்டம்செஞ்சி சட்டமன்றத் தொகுதியில் உள்ள ஒன்றிய, பேரூர் மற்றும் ஊராட்சிகளில் உள்ள கழக நிர்வாகிகள் பொதுமக்கள் ஆகியோரின் வீடுகளில் ஒன்றிய பா.ஜ.க. அரசை கண்டித்து கருப்புக் கொடி ஏற்றப்பட்டது.

விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சிமஸ்தான் எம்.எல்.ஏ. செஞ்சி தேசூர் பாட்டையில் உள்ள அவரது தளபதி இல்லத்தில்ஒன்றிய பா.ஜ.க. அரசை கண்டித்து கருப்பு. கொடிஏற்றி வைத்துதொகுதி மறு வரையறை தீர்மான நகலை எரித்து ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து எதிர்ப்பை தெரிவித்தனர்.

இதில் செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், மேல்மலையனூர் ஒன்றிய செயலாளர்கள் நெடுஞ்செழியன், சாந்தி சுப்ரமணியன்,மாவட்ட கவுன்சிலர் அரங்க ஏழுமலை, செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலி மஸ்தான்,நகர செயலாளர் கார்த்திக் உள்ளிட்ட மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சி நிர்வாகி கள்தயாநிதி, சிவா,மழை மேனி பாண்டியன்,சையத் உஸ்மான்,மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் திலகவதி விஜயகுமார், முத்துலட்சுமி, பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள், நகர தி.மு.க. நிர்வாகிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.